பக்த சரித்திர மாலிகை - மலர் 4

# மாணிக்க வாசகர்

பட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கக் காரியதரிசி

ஸ்ரீமான் S. தண்டபாணி செட்டியார்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1927

[ரெஜிஸ்தர் செய்தது]

[விலை 2 அணா

## முன்னுரை

பக்த சரித்திர மாலிகையில் நான்காவது மலராக, வெளி வரும் இம் மாணிக்க வாசகர் சரிதை மிகவும் விசேஷம் பொருந்தியதாகும். அடியவர்க் கிரங்கி எல்லாம் வல்ல சோம சுந்தரக் கடவுள் அடிபட்டதும், தம் கொள்கை நிறைவேறும் பொருட்டுப் பலவித கஷ்டங்க ளுக்குள்ளான மாணிக்கவாசகர் தம் அனுபவங்களும் இதைப் படிப்போர்க்குப் பசுமரத் தாணியேபோல் நெஞ்சில் பதி வுறும் என்பதில் ஐயமில்லை. இப் புத்தகத்தில் இடையிடை யே அநேக ஆழ்ந்த கருத்துக் கள் அமைந்த சில பாடல்களும் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. அவை படிப்போர்க்கு இன்பம் பயக்கத் தக்கன. இம் மாலி கையில் வேறு பல புத்தகங் களும் ஒவ்வொன்ருக வெளி வரும்.

யாவரும் வாங்கிப் படித்து நலமடைவார்களாக.

எஸ். தண்டபாணி

"அன்றே என்றன் ஆவியும
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்டபோதே கொண்டி லையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே."

— மாணிக்கவாசகர்

# மாணிக்க வாசகர்

## 1. அவதாரம்

பல வளங்களிலும் சிறந்தது பாண்டிவளநாடு. அப் பொன்னுட்டில் வைகையாற்றங்கரையில் திருவாதவூர் என்று ஒரு நகர முளது. அவ்வூரில் எப்பொழுதும் திருவிழாக்களும், வீடுகளெல்லாம் விருந்தோடுண்ணலும், வேதமோதுதலும் இடையீடின்றி நடைபெறுதலால் எங்கும் மகிழ்ச்சியே நிறைந்திருந்தது. மேகங்கள் நீங்காது சஞ்சரிக்கின்ற சோலைகளும், முப்போகம் விளைதலினாலே, எப்பொழுதும் உழுது கொண்டிருக்கிற வயல்களும் உயிர் நிரம்பிய உடலேபோல் விளங்கியது. இத்தகைய அணிநகரில் அமாத்தியப் பிராமணர் குலத்தில் வேத நெறியும் சைவாகம நெறியும் விளக்கம் பெற ஞானோதய சூரியன்போல ஒரு பெருந்தகையார் அவதாரம் செய்தார். அவருக்குப் பெற்றோர்கள் தங்கள் குலத்துக்குத் தகுந்த சடங்குகளெல்லாம் செய்வித்து, உரிய காலத்திலேயே கல்விப்பயிற்சியும் செய்வித்தார்கள். நாட்கள் கடந்தது. குழந்தையாகிய வாதவூரரும், இளம்பிறைச் சந்திரனேபோல் வளர்ந்து வேத முதலான கலைகளு முணர்ந்து, பக்குவநிலையடைந்து தன்னடக்கையிற் சிறந்தோரெனப் பெயர்

வாய்ந்திருந்தார். இச் செய்தியைப் பாண்டி நாட்டுக்குத் தலைநகராகிய மதுரையம்பதியில் செங்கோலோச்சிவந்த அரிமருத்தன பாண்டியன் கேள்விப்பட்டுத் திருவாதவூரரைத் தம்மிடம் வரவழைத்து, தகுந்த சிறப்புச் செய்து, அவர் அறிவிக்கும் சாதுரியமான ஆற்றலுக்கும் மாதுரியமான வார்த்தைக்கும் வியந்து, தன் அரசாட்சிக்குத் தகுதியான மதி மந்திரித்தனம் கொடுத்து மேன்மைப்படுத்தினார். இவர் எல்லாக் கலைகளையும் உறுதியாக உணர்ந்த விற்பன்னராகையால் மனு சாத்திரத்திலும் தனுர் சாத்திரத்திலும் விதித்த வண்ணம், அரசனுக்குக் கண்போன்று முற்றும் உணர்ந்த மந்திரிகளெல்லாருக்கும், முதல் மந்திரியாய், பகைவர் வன்மையை அடக்கியும், ஆறிலொரு கடமை வாங்கியும், குடிகளுக்குற்ற துயர் தங்களுக் குற்றதெனப் பசி, பிணி முதலியவற்றிற்குப் பரிகாரம்செய்து உயிர்களைக் காப்பாற்றியும், அரசாங்கத்தில் தமக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளால், குடிகளுக்கு யாதொரு கஷ்டமும் வாராமல் பாதுகாத்து வந்தார். 'ஏழையழுத கண்ணீர் கூரியவாளாகும்மே' என்றபடி தம் குடிகள் வருந்திக் கண்ணீர் விடுவார்களாயின் அது தங்கள் அரசுக்கே ஈனம் என்று நினைத்து அதிகாரி வர்க்கத்தினருக்குள்ள மமதையை அடக்கி ஜனங்களின் ஊழியர்கள் அதிகாரிகள் என்பதை அவ்வதிகாரிகளுக்கு அறிவித்து அதன் பயனாக யாதொரு கெடுதலுமின்றி ஜனங்களைக் கண்ணிமைபோல் காப்பாற்றி வருவா ராயினார். இது மட்டுமோ? செல்லுதற்கரிய பலவகைத் தீவுகளிலும் செங்கோல் செலுத்த வல்லவரான அரசர்க ளெல்லாரும் தங்களிடத்துள்ள அரும்பொருள்களைப் பாண்டியனுக்கு வரவிடுத்து ஒப்புரவான நட்புக்கொள்ளும்படி நடந்துவந்தா ரென்றால்

வாதவூரர் திறனை என்னென்று வியப்பது? இப்படி யிருக்கும் நாளிலே திருவாதவூரருக்குப் பூர்வஜன்ம விசேஷபலத்தினால் நித்தியாநித்திய வஸ்துவின் லக்ஷணம் இன்னதெனப் பகுத்தறியும் விவேகம் ஏற்கெனவே தோன்றியது. இகபரபோக விரகராய்ச் சமாதி சட்க சம்பத்துகொண்ட முமுட்சுவாகிச் சிவபக்தி செய்வதே வீடுபெறுவதற்குற்ற வழியெனக் கொண்டார். அப்பேறு வாய்க்கும்பொருட்டு, 'பிரமசொரூபமாகிய மெய்ப்பொருளை யுணர்ந்தோர்கள், அந்த மெய்ப்பொருளின் தெளிவெல்லாம் சத்திநிபாதருக்கு விளங்கச் சொன்னதே ஆகமம். அந்த வேதாகமங்களின் முடிவிலே, விளைகின்ற பொருளின் பேதா பேதங்களாகப் பிணக்குகளை ஒழித்து அஞ்ஞானமாகிய கட்டை அவிழ்த்துப் பதியாகிய தன்னையும், பசுவாகிய என்னையும் தெரிவிக்கின்ற போதனாகிய குருபரன் வருவதெக்காலம். அன்றியும் மறைப்பில்லாத மெய்யன்புக் கெளிதாக விளங்குகின்ற அருட்குருவான ஞானாசிரியனது நிறைந்த திருவருளை யல்லாமல் இந்தக் கொடிதான பாசத்தைக் கல்வி கேள்விகளால் நீக்கிக்கொள்வோம் என்று நினைப்பது புணையின்றிக் கடலைக் கடக்க நினைத்ததைப் போலாகுமே யன்றிப் பேரின்பப் பெருவழியில் நிறுத்தாதே' என்ற சிந்தனையே பெரிதும் உடையாராய் வாதவூரடிகள் வீடு பெறுதற்குற்ற பேராசையிலேயே கட்டுப்பட்டுக் கிடந்தார். ஆசையும் முதிர்ந்தது. வேதாகமங்களை உணர்ந்த பெரியோர்கள் திருக்கோயிலுக்கு வரும்போதெல்லாம் வாதவூரடிகள் போய்க் கண்டும், கண்டபோதெல்லாம் விசாரித்தறிந்தும் இப்படி அநேகம் பெரியோர்களைக் கண்டு விசாரித்துணர்ந்த பொருள்களெல்லாம் தாகவிடாய் கொண்டவர்கள் உவர்நீரை உண்டாற்போல மனத்துக்

குப் பொருந்தாமல், அரசியற் காரியங்களையும் செவ்வனே கவனித்துக்கொண்டு தனது மந்திரித் தனத்தையும் விடாமல் ஆசைநாயகனிடத்தே அன்புகொண்டு நடந்து வரும் ஒரு மடந்தையைப்போல, காலனை யுதைத்துக் காளையைக் காத்த கடவுளிடத்தே உள்ளன்புகொண்டவராய் ராஜ காரியங்களையும் நடாத்திக்கொண்டு வந்தார்.

## 2. அருளடைதல்

ஒரு தினம் வாதவூரடிகள், அரசனுடன் கொலு வீற்றிருக்கும் சமயம், குதிரைப் பரிபாலர்கள் வந்து, 'ஐயனே, நம்முடைய குதிரைக் கூட்டங்களிலே, இறந்த குதிரைகள் போக, மிஞ்சின குதிரைகளெல்லாம், முழுதும் நோய்கொண்டவைகளும், கிழங்களுமாக யிருக்கின்றனவே யன்றி நல்ல குதிரைகள் ஒன்றுவது இல்லை. ஆதலின், காலதாமதம் செய்யாமல் குதிரைகள்வாங்கிவர உத்திரவாக வேண்டும் சுவாமி என்று பிரார்த்தித்தனர். அதைக் கேட்ட அரிமருத்தன பாண்டியன், வாதவூரடிகளைப் பார்த்து 'தங்களுக்கு வேண்டிய திரவியங்களை எடுத்துக் கொண்டு கடற்கரைப் பட்டினங்களுக்குச் சென்று குதிரைகள் வந்திறங்குவன தெரிந்து நல்ல குதிரைகளாக வாங்கிக்கொண்டு வாருங்கள்' என்று ஆஞ்ஞாபித்தான். அரசன் ஆணையைச் சிரமேற் கொண்டு மன வேறுபாட்டுடன் மந்திரித்தனம் செய்துவரும் வாதவூரடிகள், கருவூலத்தைத் திறந்து வேண்டிய திரவியங்களை மூட்டையாகக் கட்டி எடுப்பித்துக்கொண்டு மதுரையிலுள்ள சோமசுந்தரக் கடவுளின் ஆலயத்துட் சென்று சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு வெளிப்

போந்து பல்லக்கிலேறிக்கொண்டு நடந்தார். இலௌகீக வாழ்க்கையில் பட்டும் படாமலு மிருக்கின்ற வாதவூரடிகள், தாம் அரசனுடைய பணத்தைக்கொண்டு குதிரை வாங்க வந்தவர் என்பதைச் சிந்தியாமல், அத் திரவியங்களை யெல்லாம் சாக்ஷாத் எம்பிரானது திருப்பணிக்கும் அவனுடைய அடியார்களின் பராமரிப்புக்கும் செலவிடுதல்தான் தகுதி என்று நினைத்துக்கொண்டு சித்தம் சென்றபடி சென்று * திருப்பெருந்துறை என்னும் திவ்யஸ்தலத்தை அணுகினார்.

அச் சமயம் தேவர்களைக் காப்பாற்றும் பொருட்டுச் சமுத்திரத்தில் தோன்றிய, ஆலகால விஷத்தை யுண்ட கடவுள், வாதவூரடிகளின் பக்குவ நிலைகண்டு, அவரை அடிமைகொண்டு பணிகொண்டருளத் திருவுளங் கொண்டு ஒரு பிராமண குல குருவாகித் தமது திருப் பாதங்களை விட்டு நீங்காத பல சீடர்களுடனே திருப் பெருந்துறைக்கு வந்து ஒரு குருந்த மரத்தி னிழலடியிலே, எழுந்தருளி யிருந்தனர். வாதவூரடிகளும் குருந்த மரத்தை நெருங்கினார்.

அந்தக் குருந்த மரம் திருப்பெருந்துறையிலுள்ள ஆலயத்தின் பிராகாரத்தில் இருந்தது. அங்கே சர்வேசுவரன் குருமுகூர்த்தமாய் விளங்கி யிருக்கவும், பெரியாரான மாணாக்கர் கூட்டங்களும் அடியவர்களும் மெய்ப்பொருளின் இயலைப் பேசிக்கொண்டிருக்கவும் கண்ட வாதவூரடிகள், கருணாமூர்த்தியாக விளங்கும் அக் குருவைத் தரிசித்து, 'அம்பலத்திலாடிய, ஆனந்த

---

* திருப்பெருந்துறை-என்னும் க்ஷேத்திரம் தஞ்சை ஜில்லாவில் பட்டுக்கோட்டை நகருக்குத் தெற்கே இருக்கின்றது. இதற்கு ஆளுடையார் கோவில் என்னும் மறு பெயருமுண்டு.

வடிவமும் வடவால விருக்ஷத்தின் கீழிருந்து சனகாதி களுக்கு அசைவறச் சொன்ன வடிவமும் ஆகிய இரண் டும் நாயினேனுக்கு எளிதாக இங்கே தோன்றுகின்ற இந்த உருவமே' என்று தெரிந்து முன்னே வந்து வணங்கி இரு கையும் கட்டி மெய்சிலிர்த்துப் புளகாங்கித மடைந்து நின்றார். அப்பொழுது அருள்வள்ளலாகிய கடவுள் வாதவூரடிகளின் பேரன்பைக் கண்டு அவ ருடைய உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தமாக வாங்கிக்கொண்டு மனக்கண்ணினாலே ஆணவம், கன்மம், மாயை எனப்பட்ட மும்மலங்களையும் போக்கி, பாதகம லத்தையும் சூட்டிச் செந்தாமரைபோலுந் திருக்கையை அவர் தலைமேலே வைத்து, சூட்சம பஞ்சாக்ஷரத்தி னாலே சூழ்ந்த பாசக் கட்டையறுத்து, 'மெய்யானந்தம் விளைநிலத்துய்த்துப் போக்கு மீட்சியுட்புறம்பிலா'ப் பூரணவடிவமாக்கினார். ஒப்பற்ற ஞானவிளக்காகிய இறைவன் அருளாலே, இரும்புண்ட நீர்போலத் தம் மைப்பற்றி வாங்கிக்கொண்ட பரிசுத்தனையும், குரு உப தேசத்தையும், தம்மை மூடியிருந்த பாசத்தையும், தம்மையும் வாதவூரடிகள் மறந்திருந்தார். பிறகு தெய் வீக உணர்ச்சி மேலீட்டினால் மதுரமான கவிகோத்துப் பாமாலையாகச் சூட்டவல்ல வாதவூரடிகளுக்கு இறைய னார், குற்றமல்லாத சொற்களாகிய மாணிக்கங்களைப் பத்திசெய்து முழுதும் அன்பாகிய கயிற்றிலே வரிசை யாகக் கோத்துப் பாமாலையாக அமுது சாத்துகின்ற தன்மையினால் மாணிக்க வாசகர் என்று தீக்ஷாநாமம் கொடுத்து, ஆறுதல் வார்த்தை சொல்லி 'உனக்குச் சில காரியமுண்டு; அதைப் பார்த்துக்கொண்டு இரு' என்று ஆஞ்ஞையிட்டு அடியார்களுடன் மறைந்தருளினார்.

# 3. திருவற்புதங்கள்

உடனே மாணிக்கவாசக சுவாமிகள் தாயைப் பிரிந்த கன்றுபோல் கதறிக் கலக்கமாகிய கடலிலே முழுகி, 'ஐயனே எனக்கு நினைக்கவுங் கூடாத திருமேனியைக் காட்டி என்னை யாட்கொண்டு அடியவர் கூட்டத்துடன் என்னையும் சேர்த்து அழைத்துப் போகாமல், என்னைத் தனியே விட்டுப் போனீரே, நான் என்ன பாவி, என்ன தீங்கிழைத்தேன்' என்று பிரலாபித்துக் கீழே கிடந்து உருண்டு புரண்டார்.

''மண்ணாதி யாருறுமனங் குழாவித் தமோறிப்
புண்ணாகி யேனைக் காணுதுழல் கின்றேனைப் போதவருட்
கண்ணாலவை முழுதுங்கரைய நோக்கியான் யானேன்
றெண்ணாவேனைத் தந்தாயெங் குற்றமே வேந்தாயே''

என்ற இப் பதிகத்தையும் இன்னும் சில பதிகங்களை யும் வாய்விட்டுப் பாடி அழுது பிரலாபித்துப் பின்பு ஒருவாறு மனம் தேறி மதுரையினின்றும் தம்மோடு வந்தவர்களாகிய பரிசனங்களைப் பார்த்து, 'நீங்கள் போய் வெகு சீக்கிரமாகக் கப்பலிலிருந்து குதிரைகள் வந்திறங்கு மென்று சொல்லுவீர்' என்று ஆஞ்ஞாபித்து அவர்களை அனுப்பிவிட்டுத் தாம் மட்டும் திருப்பெருந் துறையில் தங்கியிருந்தார் மாணிக்கவாசக சுவாமிகள். பரிசனங்களும் மதுரைக்குப் போய்ச் செய்தியை அரச னிடம் சொன்னார்கள். அரசனாகிய பாண்டியனும் தன் மந்திரியிடம் மிகுந்த பற்றுள்ளவனாதலின் நம்பி யிருந்தான்.

ஆனால், திருப்பெருந்துறையில் மாணிக்கவாசக சுவாமிகள் தாம் குதிரை வாங்கக் கொண்டுவந்திருக்கும் திரவியத்தை யெல்லாம் திருப்பெருந்துறையிலுள்ள

வேதியர்கட்கு வேண்டியமட்டும் வழங்கியும் திருப்பெருந்துறை ஆலயத் திருப்பணிக்கு ஏராளமான திரவியம் செலவு செய்தும் திருவிழா முதலியவற்றிற்குப் பணம் செலவிட்டும் சிவனடியார்களுக்கு அன்னதானம் செய்வித்தும் சிறிதுகாலம் அவ்விடத்திலேயே வசித்து வந்தார். திரவியமெல்லாம் செலவழிந்துவிட்டது. மதுரையிலுள்ள பாண்டியன் தன் மந்திரி போய் வெகுகாலமாகியும் இன்னும் ஏன் குதிரைகள் வரவில்லை என்று கோபித்து அவருக்கு நிருபம் அனுப்பினான்.

நிருபத்தைக் கண்டதும் வாதவூரடிகள் மனம் திடுக்கிட்டு, 'இனி என்ன செய்வது? அரசன் திரவியமெல்லாம் சத்காரியங்களிலே செலவிட்டோமாயினும் அரசனுக்கு நாம் என்ன சொல்வது? எல்லாம் வல்ல திருப்பெருந்துறைக் கடவுள்தான் துணை' என்று ஆலயத்துட் சென்று ஈசுவரனைப் பணிந்து வணங்கி நின்றனர். எம்பிரானாகிய சர்வேசுவரன் அசரீரியாக 'ஓ பக்தனே! நீ மனம் வருந்தற்க. குதிரைகள் எப்படியும் வந்து சேருமென்று நிருப மெழுதி யனுப்புக. பின்வருங் காரியத்தை நாம் பார்த்துக்கொள்வோம்' என்று சொல்லியருளினார். அவ்வண்ணமே மாணிக்கவாசக சுவாமிகளும், அரசனுக்கு நிருப மெழுதி விட்டார். அன்றிரவு மாணிக்கவாசக சுவாமிகள் உறங்கும் சமயம் சுவாமி கனவில் தோன்றி, 'அப்பா, நீ நாளையே மதுரைக்குச் சென்று குதிரைகள் பின்னால் வருகின்றது என்று சொல்லியிரு. நாம் இரண்டொரு தினத்தில் குதிரைகளுடன் வந்து சேருகின்றோம்' என்று சொல்லிப்போனார். அவ்விதமாகவே விடிந்தெழுந்தவுடன் மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக் கடவுளைத் தொழுதுகொண்டு பிர

யாணப்பட்டு மதுரையை அடைந்தார். உடனே பாண்டியன் கொலுவை யடுத்து அரசனை வணங்க, பாண்டியன் தன்முன்னே நிற்கும் வாதவூரரைப் பார்த்து, 'எவ்வளவு பொருள் கொண்டேகினீர்? எவ்வளவு குதிரைகள் வாங்கினீர்?' என்று கேட்டான். அதற்கு மாணிக்கவாசகர், 'மன்னுதி மன்ன, குதிரைகள் பின்னே வருகின்றன. பொருளின் கணக்கு விவரம் குதிரைகள் வந்த பின் தெரியும்' என்று பதிலுரைத்தார். அதைக் கேட்ட பாண்டியன் ஒருவாறு மனச் சந்துஷ்டி யடைந் திருந்தான். பின்பு வாதவூரடிகள் சோமசுந்தரக் கடவுளினுடைய ஆலயத்துள் சென்று பகவானை வணங்கி, 'ஐயனே, எல்லாம் உனது திருக்கூத்தே. பாண்டியனுடைய பொருளெல்லாம் நீரே ஒப்புக்கொண்டு என்னையும் அடிமை கொண்டீர். ஆனால் பாண்டியன் என்னைத் தண்டிக்காத வண்ணம் குதிரைகளுடன் வந்து சேர வேண்டியது உமது கடமை யல்லவா' என்று இறைஞ்சி நின்றார். கடவுளும் 'அவ்வாறே செய்வோம்' என்று அசரீரியாக மொழிந்தார். வாதவூரரும் தம் உறைவிடம் சேர்ந்தார்.

மறுநாள் மாணிக்கவாசகர் அரச சபைக்குப் போனபொழுது, 'குதிரைகள் எப்பொழுது வரும்?' என்று அரசன் கேட்க, சுவாமிகள், 'இன்னும் மூன்று தினத்தில் வரும்' என்று உறுதியாகச் சொன்னார். ஆகட்டு மென்று மூன்று நாளும் பொறுத்துப் பார்த்தான் அரசன். குதிரைகளோ வந்தபாடில்லை. அரசனுக்குக் கோபம் பிறந்துவிட்டது. 'இன்னும் குதிரை ஏன் வரவில்லை? ஏற, வாதவூரா! உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்தாற்போல் நீ என்னுடைய திரவி

யங்களை வாரிக் கொண்டுபோய் நான் பணித்தபடி குதிரைகள் வாங்கி வராமல் வீணாகப் பணத்தைச் செலவு செய்துவிட்டு வந்தாய் போலும். ஏ மோசக்காரா! உன்னை இனிச் சும்மா விடமாட்டேன்' என்று சீறி, தண்டக்காரர்களை விளித்து அடிகட்குக் கொடுமையான தண்டனை விதிக்கும்படி ஆக்ஞாபித்தான். அப்படியே தண்டவீரர்கள் மாணிக்கவாசக சுவாமிகளைக் கொண்டு போய் வெயிலில் நிறுத்தித் தலையில் பாரமான கருங் கல்லை வைத்துச் சுமக்கச் செய்தனர். அப்படி அவர் படுங் கஷ்டத்தைத் அவருக்குத் தோன்றாதபடி இறைவன் அருள் செய்தான். சுவாமிகள் மௌனமாய் நின்று கொண் டிருந்ததைப் பார்த்து வீரர்கள் பயந்து என்ன மாயமோ என வியந்து மறுபடியும் கல்லை இறக்கிக் கையி லுங் காலிலும் கிட்டி கட்டி நெருக்கி வருத்தினார்கள். அடியவர் படுங் கஷ்ட மெல்லாம் இறைவன் தாங்கிக் கொண்டபடியால், அதற்கும் சுவாமி சலியாம லிருந் தார். இப் பாவிகள் அடியவரைக் கடுமையாகத் தண் டிப்பதைக் காண அஞ்சினவனாக அருணனும் அஸ்த மன மாயினான். இருள் மூண்டது, வாதவூரடிகளைத் தண்டக்காரர்கள் கையிலும், காலிலும் விலங்கிட்டுச் சிறையி லடைத்தனர். ஆங்கு சுவாமிகள் தமக்கு வந் துற்ற தீங்கை நினைத்து மனம் வருந்தி,

"எந்தா யனைத்துலகு மீன்றாயேத் தேவர்க்குந்
தந்தாய் செழுங்குவளைத் தாராய் பெருந்துறையில்
வந்தாய் மதுரைத் திருவாலவா யுறையுஞ்
சிந்தாமணியே சிறியேற் கிரங்காயோ"

என்று தொடர்ச்சியாகச் சில பதிகங்கள் பாடி வாய் விட்டுக் கதறினார். இவ் வழுகுரல் ஆலவாய்க் கடவுள் காதில் விழுந்ததும், மறு தினமே நந்தி முதலான

கணாநாதர்களை விளித்துக் காட்டி லிருக்கிற நரிகளை யெல்லாம் குதிரைகளாக ஆக்கி 'நீங்கள் குதிரைவீரர் கள் போல மதுரைக்குச் செல்லுங்கள் ; நாமும் ஒரு வீரனுக வந்து சேருவோம்' என்று சொல்ல, அவர்களும் அப்படியே நரிகளைக் குதிரைக ளாக்கிக்கொண்டு மது ரையை நோக்கி வந்தனர். காட்டில் திரிந்து கொண் டிருந்த நரிகளெல்லாம் அழகிய துரகங்களாக மாறி மிக்க ஆடம்பரமாய் மதுரையை நோக்கி வந்துகொண் டிருப்பதைக் கண்ட மதுரை ஜனங்கள் ஓடோடியும் வந்து வாதவூரடிக ளிடம் தெரிவிக்க அவரும் தண்டக் காரர்களுடன் விரைந்து அரச சபைக்குச் சென்று குதிரைகள் வருவதைத் தெரிவித்தார். பாண்டியன் குதிரை வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தும் குதிரை வரவு சிறிதுபோது தாமதிக்க, பாண்டியன் மனங்கடுத்து, மறுபடியும் வாதவூரடிகளைக் கடுமையாய்த் தண்டித் தான். மாணிக்கவாசக சுவாமிகள், ஒன்றுந் தோன் றாதவராகக் கூடற் கடவுளையே தியானித்துக்கொண் டிருந்தார்.

உடனே கும்பல் கும்பலாகக் குதிரைப் படைகள் வந்து சேர்ந்தன. பாண்டியனும் மனமகிழ்ந்து, வாத வூரடிகளை வரவழைத்துச் சமாதானம் சொல்லிச் சந் தோஷப்பட லானுன். வந்த குதிரைகள் மிகவும் அழ காகவும், கம்பீரமாகவும் இருந்தபடியால், அரசன் கொண்ட மகிழ்ச்சிக்கோ அளவில்லை. அக் குதிரைகளை அநேக வீரர்கள் நடத்தி வந்தாராயினும் அவர்களுக்குத் தலைமையாக, ஒரு வீரர் விளங்கினுர். மிக்க பராக்கிரம மாகத் தோன்றிய வீரர் தலைவராகிய அவர்தான் காட்டு நரிகளைத் துரகங்களாக மாற்றி, பாண்டியனிடம்

கொண்டுவந்திருக்கும் கூடற்பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள். சந்தோஷ மடைந்த பாண்டியன் குதிரைவீரர்களின் தலைவராகிய கடவு ளிடம் கயிறு மாறி, குதிரைகளைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்குத் தக்க மரியாதை பண்ணி அனுப்பினான். அப்பால் சென்று கடவுளும் அந்தரத்தியானமானார். இராக் காலம் வந்தது. நடுக்கங்குலில் கடவுளின் மாயையினால், குதிரைகளாக வந்து லாயங்களில் கட்டப்பட்டுக் கிடக்கும் காட்டு நரிகள் எல்லாம், தங்களது பழைய சொரூபத்தை யடைந்து, லாயங்களில் கட்டி யிருந்த பழைய குதிரைகளை யெல்லாம் கடித்துக் கொன்று ஊரெங்கும் ஊளை யிட்டுக்கொண்டு காட்டை நோக்கி ஓடின.

இரவில் உண்டான, இந்தப் பெருங் கூச்சலைக் கேட்டு, ஜனங்கள் பீதி யடைந்து வாளாவிருந்தனர். இதை யறிந்து பாண்டியன் மிகவும் சினந்து, 'என்ன மோசம் செய்தான் இவ் வாதவூரான்!! இவன் இந்திர ஜாலம் மகேந்திர ஜாலம் கற்றவன்போலும்! நரிகளைப் பரிக ளாக்கித் திரும்பவும் அப் பரிகளை நரிக ளாக்கி என் பழைய குதிரைகளையும் நாசமாக்கி மோசம் செய்தானே. இதற்கு இத் துட்டனைச் சும்மா விடலாகாது; நமது திரவியத்தைக் கொடுக்கும்வரை கடுமையாகத் தண்டிப்பதே முறைமை என்று எண்ணி விடிந்தவுடனே வாதவூரடிகளைச் சிறை செய்வித்து முன்னிலும் பதின் மடங்கு கதிகமாகத் தண்டனை செய்வித்தான். தண்டனையின் கொடுமை சகிக்கமாட்டாது வாதவூரடிகள்,

"நாதவோ நாதமுடி விறந்த நாடகஞ்செய்
பாதவோ பாதகனு மென்னைப் பணிகொண்ட
வேதவோ வேதமுடிவின் விளைந்த தனிப்
போதவோ போதநெறி கடந்த பூரணவோ"

என்று முறையே சில பதிகங்கள் பாடி ஈசுவரனைத் தியானிக்க, எங்கும் நிறைந்த கூடற்கடவுள், தமது அடியவர் படுங்கஷ்டத்தைத் தீர்க்கவிழைந்து வைகை யாற்றில் வெள்ளம் கரைபுரண்டு வரும்படி செய்தார். அதுதான் தாமதம். வைகையாற்றில் பெருத்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுவிட்டது. கரை யெல்லாம் உடை பட்டு மதுரைமாநகரில் அநேக பாகம் தண்ணீரால் கொள்ளப்பட்டுப் போயிற்று. இச் செய்தியறிந்த அரசன் உடனே, தன் பிரஜைகள் ஒவ்வொருவரும் வீதாசார மாக ஆற்றங்கரையில் கொஞ்ச பாகம் அடைக்கவேண்டு மென்று உத்தரவிட்டான். அப்படியே குடிகள் யாவ ரும் தத்தமக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட கரையை அடைத்து வந்தனர். அவ்வூரில் வந்தி என்று பெயர் கொண்ட பிட்டுவிற்கும் கிழவி ஒருத்தி இருந்தாள் அவளுக்கு மகப்பேறில்லை. தினந்தோறும் சுடும் பிட்டை அவள் சோமசுந்தரக் கடவுளுக்கு ஆராதித்து விற்பது வழக்கம். கடவுளிடத்தில் அவளுக்கு விசேஷ பக்தி யுண்டு.

அக் கிழவிக்கும், அரசன் உத்தரவுப்படி ஆற்றங் கரையில் ஒரு பாகம் அடைக்கும்படி பிரித்துக் கொடுக் கப்பட்டது. என் செய்வாள் பாபம். ஆண் துணை யில்லாத அவள் ஆற்றங்கரையை எவ்வாறு அடைக்கக் கூடும். கரையை அடைக்காவிட்டால் பாண்டியன் தண் டிப்பானே என்று அஞ்சி, வேறு கதியின்றி, பகவானை நோக்கி என் செய்வேனென்று அழுதாள். சோமசுந்தரக் கடவுள் கிழ வந்திக்கு அருள் செய்யவும், மாணிக்க வாசகரின் இடரைத் தீர்க்கவும் ஒரு கூலியாள் உருவங் கொண்டு தோளில் ஒரு மண்வெட்டியைப் போட்டுக்

கொண்டு தலையில் கூடை யொன்றைக் கவிழ்த்துக் கொண்டு வந்தியிடம் வந்து சேர்ந்தார். கூலியாள் வருவதைக் கண்ட வந்தி தனக்கு ஓர் ஆள் கிடைத்ததைப் பற்றிச் சந்தோஷித்து அக் கூலியாளாகிய கடவுளைப் பார்த்து 'அப்பா கரையை அடைக்கிறாயா?' என்று கேட்க 'அடைத்தால் என்ன கூலி தருவாய்?' என்று கடவுளாகிய கூலியாள் கேட்டார். வந்தி பிட்டுத் தருவேனென்றாள். 'ஆனால் எனக்குப் பசியா யிருக்கிறது. உதிர்ந்த பிட்டுக்கள் இருப்பின் கொடுங்கள் அம்மணி, அதை உண்டு களைப்பாறின பிறகு கரையை அடைக்கிறேன்' என்று கூறி வந்தி கொடுத்த பிட்டை வாங்கியுண்டு சந்தோஷித்து உள்ளன்புடன் கொடுத்த இதுவே எனக்கு உவந்தது என்று நினைத்து ஆற்றங்கரையை அடைக்கப்போனார்.

கூலியாளாக வந்த கடவுள் தாம் வந்தி வீதத்தை அடைக்க வந்திருப்பதாக அரசாங்க அதிகாரிகளிடம் சொல்லித் தன் பெயரைப் பதியவைத்துக் கொண்டு மண்ணை வெட்டிக் கூடையிற் போட்டு, கங்கையைத் தாங்கிய சிரமேற்றூங்கிக் கரையில் போட்டு அடைத்தார். திருவிளையாடல்கள் பல புரிய வெண்ணிச் சிறிது நேரம் மண் வெட்டுவதும், சிறிது நேரம் விளையாடுவதும், சிறிது நேரம் மடியில் கொண்டுவந்திருந்த பிட்டைத் தின்று களிப்பதும், சிறிது நேரம் தண்ணீரில் விழுந்து நீந்துவதும், இப்படியாக விளையாடிக்கொண் டிருந்து வேலை செய்யாதிருந்தது மன்றி வேலை செய்யும் கூலியாட்களையும் வேலை செய்ய வொட்டாமல் விகடம் பேசித் தடுத்தும் வந்தார். இதைக் கண்டு அரசாங்க அதிகாரிகள் கோபித்தால் அதற்குக் கடவுளாகிய கூலியாள்

மறுமொழி யொன்றும் சொல்லாது அலக்ஷியமா யிருந்தார். வைகைக்கரை அடைபடுவதை நேரே பார்த்துக் கொண்டுவந்த பாண்டியன் இந்தக் கூலியாள் செய்யும் விபரங்களைக் கேள்வியுற்றுக் கோபங்கொண்டு கையிலிருந்த பிரம்பைக் கொண்டு அண்டங்களையும் அளவில்லாத உயிர்களையும் தனக்குச் சரீரமாகக்கொண்ட கடவுள் முதுகிலே ஓங்கி யடித்தான். கூலியாளாக வந்த கடவுள் அடிபட்டவுடனே தாம் எடுத்துக்கொண்டு வந்த கூடையோடு மண்ணை ஆற்றில் கொட்டிவிட்டு மறைந்தருளினார். சர்வேசுவரனாகிய கடவுள் அடிபட்டதால் அவர் நிறைந்துள்ள சகல உயிர்கள்மீதும் அவ் வடி பட்டதாம். மீந்த மண்ணைக் கடவுள் கொட்டிப் போன வுடனே கரையும் உயர்ந்துவிட்டது. அது சமயமே யாவருங் காண ஆகாயத்திலிருந்து ஒரு விமானம் இறங்கியது. இறைவன் பணித்தபடி வந்தி அதிலேறிக்கொள்ள அவ் விமானம் வானோக்கிச் சென்று விட்டது.

இவ் வற்புதங்களைக் கண்ட பாண்டியன் முதலானவர் திகைத்து நின்றனர். மதுரையம்பதியில் வாழும் சோமசுந்தரக் கடவுள் இடபாரூடராக ஆகாயத்தில் தோன்றிப் பாண்டியனை விளித்து, 'ஓ அரசனே நீ சம்பாதித்த திரவியங்களெல்லாம் தரும நீதிப்படி வந்தது. ஆகையால் குதிரை வாங்குவதற்குத் திரவியங்களை எடுத்துப்போன வாதவூரன் அப் பொருள்களை யெல்லாம், பரிசுத்தமாகவே, எமக்கும் எம் அடியார்களுக்கும் உதவும்படி செய்தான். நீ அதனைத் தெரிந்து கொள்ளாமல் நமது அடியவனைத் துன்பப்படுத்தினதால், நரிகளைப் பரிகளாக்கி உனக்குக் கொண்டு வந்து கொடுத்தோம். இரவில் பரிகளை யெல்லாம் நரிக

ளாகவும் மாற்றினோம். நீ பின்னும் வாதவூரனை நெருக்கி வருத்தினாய்; நாம் அது பொறாமல், வைகையாற்றைப் பெருக்கி, வந்திக்குக் கூலியாளாக வந்து அவள் தந்த பிட்டையு முண்டு, உன் பிரம்படியும் பட்டு, வந்திக்கும் மோக்ஷமளித்து அடைபடாதிருந்த வைகைக் கரையையும் உயர்த்தினோம். இவைகளெல்லாம், யார்பொருட்டுச் செய்தோம்! எமது அடியவர்களில் சிரேஷ்டனான வாதவூரனென்று பெயர் கொண்ட மாணிக்க வாசகன் பொருட்டுத்தான். உன்னுடைய திரவியத்தையே மாணிக்க வாசகன் செலவிட்டபடியால் நீ செய்த எல்லாக் குற்றங்களையும் மன்னித்த தன்றி மறுமையிலும் உனக்குச் சுகமே தர விருப்பங் கொண்டுள்ளோம். ஆகவின், இனியாவது எமது பக்தனை அவன் சொல்லும் வழியே தனியே போகவிடு' என்று சொன்னார்.

இவ்வார்த்தைகளைக் காதாரக் கேட்ட பாண்டியன், மிகப் பயந்து வாதவூரடிகளைக் கண்டு வணங்கி மன்னிப்புக் கேட்டு நின்றார். மாணிக்கவாசகரும் பாண்டியனுக்கு ஆசிர்வாதம் செய்து அனுப்பிவிட்டு ஆலவாய்க் கடவுளை வணங்கி அவர் பணித்தபடி தில்லை மூதூராகிய சிதம்பர க்ஷேத்திரம் போகப் புறப்பட்டார். மாணிக்கவாசக சுவாமிகள் தாம் இதுவரை கொண்டிருந்த மந்திரிச் சின்னங்களை யெல்லாம் களைந்தெறிந்து துறவியுடை தரித்துக்கொண்டு நேராகச் சிதம்பரம் போகாமல், திருப்பெருந்துறைக்குப் போய்க் கடவுளைத் தரிசித்து அதன் பின்னரே போகவேண்டு மென்று எண்ணி அங்குப்போய்ப் பகவானைத் தியானித்துக் கொண்டிருந்தார். அவ்விடத்தே சில அடியவர்கள் வந்து சுவாமிகளை அந்தரங்க பக்தியுடன் துதித்துக்

கொண் டிருந்தமையால், கடவுள் தோன்றி 'பக்தர்களே, நீங்கள் சிறிது காலம் நமது அடியவன் மாணிக்கவாசக னுடனிருந்து இவ்விடத்தில் தொண்டு செய்துகொண் டிருங்கள். ஒரு தினம் தடாகத்தில் அக்கினி தோன் றும்; அந்தச் சமயம் வாதவூரன் தவிர நீங்கள் யாவரும் அதில் முழுகி என்னிடம் வந்து சேர்வீர்களாக. ஆனால் வாதவூரன் மட்டும் திருப்பெருந்துறையை நீங்கித் திரு வுத்தரகோச மங்கையை அடைந்து அங்கு என் அரு ளால் அஷ்டமா சித்திகளையு மடைந்து வழியிலுள்ள பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு, சிதம்பரத்திற்கு வந்து புத்தரை வாதில்வென்று என்னை அடையக் கடவன்' என்று சொல்லி மறைந் தருளினார்.

பிறகு, மாணிக்கவாசகர் அடியார்கள் புடைசூழ ஆளுடையார் கோவிலில் தங்கியிருந்து பகவானை வணங் கிக்கொண் டிருந்தார். ஒரு தினம் ஈசுவரன் உத்திர வுப்படி தடாகத்தில் அக்கினி தோன்ற மாணிக்க வாசகர் நீங்கலாக இதர அடியார்கள் யாவரும் அதில் கலந்து தெய்வீகம் பெற்றனர்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருப்பெருந்துறைக் கடவுளை வணங்கிக்கொண்டு திருவுத்தரகோச மங்கைக் குச் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு திரு விடைமருதூர், திருவாரூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் முதலிய ஸ்தலங்களை வணங்கிப் பதிகங்கள் பாடிக் கொண்டு தில்லை க்ஷேத்திரத்தை யடைந்து சுவாமி தரி சனம் செய்துகொண்டு வெளியில் புறப்பட்டார். தில்லை மூவாயிரவர் வாழும் ஸ்ரீ சிதம்பரத்தின் வீதிவழியே செல்லும்போது மாணிக்கவாசக சுவாமிகள் அமிர்த மாகிய திருவாசகஞ் சொல்ல ஆரம்பித்து அதைப் பாடி

முடித்தார். இவருடைய செய்தியும் இவர் பாடிய திருவாசகத்தின் மேன்மையும் எங்கும் பரவலாயிற்று. வேதாந்தப் பொருள்களாகிய அரிய விஷயங்களைத் தமிழில் சொல்லிய மாணிக்கவாசகரின் புகழ் எங்கும் ஓங்கத் தலைப்பட்டது. மாணிக்கவாசக சுவாமிகள் சிதம்பரத்தின் எல்லைப்புறத்தில் ஒரு பன்னகசாலை நியமித்து அங்கிருந்துகொண்டு நாடோறும் ஆலயத்துக்குப் போய், சுவாமி தரிசனஞ் செய்து வந்தார்.

இதுநிற்க, ஒரு தவசிரேஷ்டர் பல தலங்களையும் சுற்றிச் சிதம்பரத்தையும் தரிசித்துச் சிதம்பரத்தின் பெருமையைத் தெரிந்துகொண்டு எங்குபோய் யாரிடத்தில் பேசினாலும் 'சிதம்பரம் வாழ்க' என்று சொல்லி வருவாராயினர். அந்தத் தபோதனர் புத்தர்களுக்கு உறைவிடமாயிருந்த ஈழ நாட்டுக்குச் சென்றபோது தமது வழக்கப்படி 'சிதம்பரம் வாழ்க' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். இதைக்கேட்ட புத்தர்கள் இவரைப் பிடித்துக்கொண்டுபோய் அரசனிடம் விட்டு இவர் 'சிதம்பரம் வாழ்க' என்று சொல்லிக்கொண்டு திரிகிறார். இவரை 'விசாரிக்கவேண்டும் ஐயனே' என்றார்கள். ஈழநாட்டு மன்னன் அத் தபோதனரைப் பார்த்து, 'ஓய் தவசியே! நீர்கூறும் வார்த்தைகளின் அர்த்தத்தை விளங்கச் சொல்லும்' என்று கேட்டான். அதற்குத் தவசியானவர், 'ஐயா அரசனே! சிதம்பரம் என்றொரு க்ஷேத்திர முளது. அதுவோ திரிபுவனங்களுக்கும் முன்னே உண்டாகிய தெய்வஸ்தலம். அவ்வூரிலுள்ள ஆலயத்தில் விளங்கும் நடராஜ மூர்த்தியே ஒப்புயர்வற்ற பரம்பொருள். அவரை மனம் வாக்குக் காயங்களால் தியானித்தால், முத்தியுண்டு; அதன்பொருட்டு "சிதம்

பரம் வாழ்க'' என்று சொல்லிக்கொண்டு திரிகிறேன்' என்று சொன்னார்.

அதை அரசனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த புத்தகுருவானவன் கேட்டதும் மிகச் சினந்து 'புத்தனை விட வேறு தெய்வமும் உண்டோ? இதோ நான் போய் அங்குள்ளவர்களை வாதில் வென்று தில்லையிலுள்ள அவ் வாலயத்தைப் புத்தன் கோயிலாக ஆக்குவேன்' என்று கூறிச் சபதம் செய்து சிவிகையிலேறிக்கொண்டு சிதம் பரத்திற்குப் போனான். ஈழநாட்டு மன்னனாகிய புத்த ராஜனும் தன் புத்திரியுடன் சிதம்பரத்துக்குப் போனான். தபோதனர் தம் வழியே சென்றுவிட்டார்.

புத்தகுருவும் புத்தராஜனும் தில்லையை யடுத்துத் தாங்கள் தர்க்கத்திற்கு வந்திருப்பதைத் தெரிவிக்க, தில்லை மூவாயிரவர்கள் அதனைக்கேட்டுத் தர்க்கம் செய்வ தானால் சோழராஜன் புலவர்களை முன் வைத்துத் தர்க் கிப்பதுதான் சிலாக்கியமென்று நினைத்து அப்படியே சோழ ராஜனுக்கும் பிரபல வித்துவான்களுக்கும் மறு தினம் வந்து சேரும்படி லிகிதமனுப்பிவிட்டுப் புத்தர் களிடம் 'நாளையதினம் உங்களோடு தர்க்கிப்போம்' என்று சொல்லிப் போனார்கள். அன்றிரவு சிவபெரு மான் அவர்கள் சொப்பனத்தில் தோன்றி 'தில்லையின் எல்லையில் எனது அடியவன் மாணிக்கவாசகன் இருக் கிறான். அவன் வந்தால் இப் புத்தகுருவைத் தர்க்கத் தில் வெல்லுவான். ஆதலின், அவனை அழைப்பித்து இப் புத்தனை வெல்லச் செய்வீர்களாக' என்றுசொன்னார். மறுதினம் தில்லையில் சோழராஜனும் இதர புலவர்களும் ஏராளமாய் வந்து கூடினர். பகவான் கட்டளைப்படி தில்லை மூவாயிரவரும் மாணிக்கவாசகரை அழைத்து

வந்து சபையி லிருந்தினர். யாவருங் கேட்கும்படி புத்தகுரு தமது மதத்தி னுண்மையையும் தமது கடவுளின் மேன்மையையும் சொல்லித் தமது மதமே பெரிது என்றும் தமது கடவுளே ஒப்புயர்வற்றவரென்றும் கூறினன். மாணிக்கவாசக சுவாமிகள் அவன் கூறியதையெல்லாம் மறுத்து அதற்குத் தகுந்த காரணங்கள் காட்டிப் பேசி சைவசமயத்தி னுண்மையையும் சிவபெருமானின் ஒப்புயர்வற்ற தன்மையையும் வலியுறுத்திப் பேசினர்.

அவைகளை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த புத்த குரு தான் சொல்லிய கட்சியெல்லாம் மாணிக்கவாசக சுவாமிகள் முன்னிலையில் இரவிமுன் பனிபோலானதைக் கண்டு தர்க்க முறைமை தவறி வாயில் வந்ததைப் பேசித் தூஷிக்க ஆரம்பித்தான். இதைக் கண்ட சுவாமிகள் சினந்து, 'ஹே சரஸ்வதி, தான்றோன்றித் தம்பிரானாக எல்லாம் வல்ல பரம் பொருளையும் அவர்தம் அடியவர்களையும் வாய் கூசாமல் தூஷிக்கும் இம் மூடன் நாவில் இன்னும் ஏன் வாசம் செய்துகொண் டிருக்கின்றாய்? நான்கு வேதங்களையும் சொல்லிய வாணியே, திரிநேத்திரத்தை யுடைய பரமேசுவரனது திருவருள் இல்லையென்று சொல்லும், மூடனுடைய நாவை விட்டு உடனே விலகிவிடு' என்று சொல்ல, சரஸ்வதியும் அத் துஷ்டனுடைய நாவை விட்டு நீங்கினாள். புத்த குருவும் ஒடுங்கி நடுங்கிப் பேச வாயில்லாது நாக் குளறும் தன்மையை அடைந்து ஊமையனாயினன். இதைக் கண்டு ஈழ தேச மன்னனாகிய புத்தசமய அரசன் பயந்து, சுவாமிகளின் பாதங்களை வணங்கி, 'ஐயனே வாயுள்ளவரை ஊமை யாக்கினீர்கள், இதோ என் பக்கத்தி லிருக்

கும் என் புத்திரி பேச்சில்லாத ஊமைப் பெண்; இப் பெண்ணைப் பேசும்படி செய்வீர்களாயின் நான் உங்களுக்கு அடியவனாகி உங்கள் சமயத்தையே அனுஷ்டிக்கிறேன்' என்று சொன்னான்.

மாணிக்கவாசக சுவாமிகள் அப் பெண்ணை எதிரே அழைத்து உட்கார வைத்துக் கிருபா நோக்கம் செய்து 'அழகிய கூந்தலை யுடைய பெண்ணே, பக்தி என்பதைச் சரியாக உணராத புத்த குருவுக்குள்ள சந்தேகத்தை நீயே தீர்த்து வை. திரிபுர மெரித்த விரி சடைக் கடவுளின் வல்லமையை உன் வாய் மொழியாலே தெரிவி' என்று சொன்னார். உடனே அந்த ஊமைப் பெண்ணும் வாய் திறந்து புத்தனுடைய கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்லிற்று. இதைப் பார்த்த யாவரும் மிக்க வியப்படைந்து இறைவன் திருவருளை ஏத்தினர். இதை மாணிக்கவாசகர் பதிகமாகப் பாடினார். உடனே புத்தராஜன் புத்தகுரு முதலிய யாவர்களும் புத்த சின்னங்களை நீக்கி, சிவ சின்னங்களைக் கொண்டு சற்சமயமாகிய சைவத்தையே மேற்கொண்டொழுகலாயினர்.

## 4. வீடடைதல்

இப்படியாக மாணிக்கவாசக சுவாமிகள் சிதம்பரத்தி லிருந்துகொண்டிருக்கும் சமயம், பொற்சபையில் நடனம் செய்கின்ற சபாபதியானவர், ஒரு தினத்தில் பிராமண வேடங்கொண்டு மாணிக்கவாசகரின் ஆசிரமத்தை அடைந்து அவர் எதிரே வந்து வீற்றிருந்தார்.

மாணிக்கவாசகர்—சுவாமி, தாங்கள் எவ் ஊரோ?

வந்தவர் — நானிருப்பது பாண்டிய தேசம்: மகா மேன்மை தங்கிய தாங்கள் அவ்விடத்தே செய்த திரு வற்புதங்களுக்குப் பிறகு நாடு செழித்து நலமடைந் திருக்கின்றது. நான் தங்களைப் பார்க்க வேண்டுமென்று அவாக் கொண்டு திருப்பெருந்துறை முதலிய தலங்க ளைத் தரிசித்துக்கொண்டு இடையில் தாங்கள் புத்தரை வாதில் வென்றதையும் கேள்விப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன்.

மாணிக்கவாசகர் — சந்தோஷம், வேறு சமாசாரம் யாதேனு முண்டோ?

வந்தவர் — சுவாமி, தாங்கள் பாடிய பாடல்கள் யாவும் அமிர்தத்தினும் ருசிகரமாக இருக்கின்றது. உலகி லுள்ளோர் ஓதித் துன்பத்தினின்றும நீங்கும்படி அதை எழுதிக்கொண்டு போக வந்தேன்.

இதைக் கேட்டதும் மாணிக்கவாசக சுவாமிகள் அப்படியே ஆகட்டுமென்று தாம் பாடிய திருவாசகங் களை யெல்லாம் ஒவ்வொன்ருகச் சொல்லி வந்தார். பிரா மணராக உருக் கொண்டு வந்திருக்கும் கடவுளும் தமது திருக்கரத்தில் எட்டைப் பிடித்து எழுதி முடித்தார். அதன் மேல் அப் பிராமணர், 'ஐயனே! இவ் வரிய திரு வாசகம் உலகுக்கு மிகுந்த உபகாரமாக இருக்கும்; உமா தேவி பாகராகிய சபாபதியைப் பாட்டுடைத் தலைவனக வைத்து ஒரு கோவை பாடியருளல் வேண்டும்' என்று சொன்னர். அதனைக் கேட்ட மாணிக்கவாசக சுவாமிகள்,

"திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக் [தெய்வ
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்கு
மருவளர்மாலை யோர்வல்லியி னேல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே"

என்று முறையே திருக்கோவையாரைப் பாடி முடித்தார். கடவுளாகிய பிராமணரும் அதை எழுதி முடித்துப் புத்தகத்தைக் கட்டி எடுத்துக்கொண்டு மறைந்தருளி ஞர். எதிரிலிருந்த பிராமணர் மறைந்ததைக் கண்டு மாணிக்கவாசக சுவாமிகள் வந்தது சபாபதியே என் றறிந்து ஆனந்த பரவசரானார்.

மறைந்தருளிய சபா நாயகர், கனக சபையிலே திருவாசகம், திருக்கோவையார் இரண்டையும் படித்து முடிவில் 'இது எழுதியது தில்லையில் நடமிடும் அழகிய திருச்சிற்றம்பல முடையார்' என்று கைச் சாத்திட்டு அதைச் சிற்சபையிலேயே வாசற்படியின்மீது வைத் தருளினார். இதை அர்ச்சகர் கண்டெடுத்துத் தில்லைவா ழந்தணர் யாவர்க்கும் அறிவிக்க அவர்கள் யாவரும் திர ளாக ஆலயத்துள் வந்து ஆச்சரியத்துடன் அப் புத்த கத்தைப் பிரித்துப் படித்து ஆனந்த மடைந்து தவ சிரேஷ்டராகிய மாணிக்கவாசகரைக் கொண்டாடி எல் லோரும் அத் திருமுறையைக் கொண்டுபோய் மாணிக்க வாசகரிடம் வைத்துச் சபாபதியின் திருவிளையாடலைச் சொல்லிப் புகழ்ந்தார்கள். மாணிக்கவாசகர் அது கண்டு 'அற்பமாகிய அடியேன் பாடலை எல்லோரும் மன மகிழ்ந்து கொண்டாட வருளிச் செய்த ஐயனே' என்று புலம்பி இறைவனைத் துதித்தார். தில்லை மூவாயிரவர் சுவாமிகளைப் பார்த்து, 'எப்படித் தங்களிடமிருந்து இப் பாடல்களை இறைவன் ஓதிப் போனார்' என்று கேட்க மாணிக்கவாசக சுவாமிகள் அதன் விபரத்தைத் தெளி வாக யாவர்க்கும் சொன்னார்.

தில்லையி லுள்ளவர்க ளெல்லோரும் 'ஐயனே இப் பிரபந்தத்திற்குப் பொருள் சொல்லி யருள வேண்டு'

மென்று கேட்டுக்கொண்டார்கள். அன்று மக நக்ஷத்திரம் கூடிய சுப தினம். மாணிக்கவாசக சுவாமிகள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு ஆலயத்தினுள் நுழைந்து சிற்சபையிலே போய் ஆங்கு திருநடனம் செய்துகொண் டிருக்கும் சபாபதியைச் சுட்டிக் காண்பித்து 'இதுதான் பொருள், என்று சொல்லி இறைவன் திருவருட் கடாக்ஷத்தால் சிற்சபையிலேயே மறைந்தருளித் தெய்வீகம் பெற்றார்.

சைவசமயத்தை நிலைநாட்டிய புண்ணிய புருஷர்களுள் இவருமொருவர். சைவசமயாசாரியர்களின் சரிதை யாவும் பெரிய புராணமாகிய திருத்தொண்டர் புராணத்திலேயே சொல்லப்பட் டிருப்பினும் மாணிக்கவாசகரின் சரிதை மட்டும் திருவிளையாடற்புராணத்திலும், திருவாதவூரர் புராணத்திலும் தெரியவருகின்றது. இவர் இயற்றியுள்ள திருவாசகம் கல்லையும் கரைக்கும் தன்மையது. 'திருவாசகத்திற் குருகார் ஒரு வாசகத்திற்குமுருகார்' என்பது உலக வழக்கு.

முற்றிற்று

Printed at the 'Aurora Press,' Madras — 1927, (C)